தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள்



# தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்


பதிப்பாசிரியர்

முனைவர் கா. ஸ்ரீதர்
முனைவர் க. தங்கமாரி
முனைவர் செ. துர்காதேவி
பேரா. இரா. அன்னலட்சுமி
பேரா. செ. சாந்தி
பேரா. சோ. ஹரிபாண்டிராஜன்
முனைவர் வீ.ச. அசோக்குமார்
பேரா. சி. அம்சவள்ளி



Estd : 1947

ஸ்ரீ இ. நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி)
விருதுநகர்

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல்தலைப்பு | : | **தமிழ் இலக்கியங்களில் வழி** (பன்னாட்டு ஆய்வுக்கருத்தர 18 ஆகஸ்ட் 2017 |
| முதல்பதிப்பு | : | ஆகஸ்ட்,2017 |
| பதிப்புரிமை மற்றும் வெளியீடு | : | **வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி,** (தன்னாட்சி), விருதுந |
| மின்னஞ்சல் | : | Support@Vhnsnc.edu.in |
| வலைதளம் | : | www.vhnsnc.edu.in |
| ISBN No | : | 978 - 93 - 81723 - 75 - 3 |
| புத்தக அளவு | : | 5.83 x 8.27 |
| பக்கங்கள் | : | 576+14 பக்கங்கள் |
| விலை | : | ரூ.400/- |
| அச்சிட்டோர் | : | லேசர் பாயிண்ட், வசந்த நகர் முதன்மைச் சாலை, மதுரை-3 |
| அட்டைப் படம் | : | Sree Graphics - 9003317131 Virudhu Nagar. |


இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைக் கருத்துகளுக்கு அந்தந்தக் கட்டுரையாளர்களே முழுப் பொறுப்பாவார்கள்.

| | | |
|---|---|---|
| 42 | **முத்து வைரம், மு.**<br>சிவனென்னும் பெயரினன் | 237 |
| 43 | **முருகேசன், ஆ.**<br>சித்தர்களின் வழிபாட்டு நெறிகள் | 243 |
| 44 | **மெர்சி ஆஞ்சலா ஆ.**<br>பரிபாடல் உணர்த்தும் திருமால் வழிபாடு | 248 |
| 45 | **மோகினி அ.**<br>பலராம வழிபாடு – ஓர் ஆய்வு | 254 |
| 46 | **ரவி, மு.**<br>வழிபாட்டுத் தளங்களும் சூழல்தரமிளத்தலும் | 260 |
| 47 | ரஜியா பானு, அ.<br>**ஐந்திணைகளில் கடவுள் வழிபாடு** | 265 |
| 48 | ராகசுதா, ப.<br>சங்க இலக்கியங்களில் இறைசார் செய்திகள் | 270 |
| 49 | **ரேகா இரா.**<br>காட்டுநாயக்கன் பழங்குடி மக்களின் நாட்டுப்புறப் பாடல்களும் பயன்பாட்டுச் சூழலும் | 275 |
| 50 | **ரூபன் அ.**<br>உரையாசிரியர்களும் நடுகல் வழிபாடும் நம்பிக்கைகளும். | 281 |
| 51 | **ரோகிணி ச.**<br>இயற்கை வழிபாடு | 286 |
| 52 | **லதா, க.**<br>செவ்வியல் இலக்கியங்களில் கடவுட் செய்திகள் | 291 |
| 53 | **லெட்சுமி க.**<br>தமிழிலக்கிய வழிபாடுகளில் காணலாகும் மருத்துவச் சிந்தனைகள் | 296 |
| 54 | **லெட்சுமி ரா.**<br>தமிழ் இலக்கியங்களில் பெருந்தெய்வ (முருகன்) வழிபாடு | 302 |

# 52. செவ்வியல் இலக்கியங்களில் கடவுட் செய்திகள்

முனைவர் க. லதா,
இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

பண்டைய தமிழ்ச்சமூகம் இம்மை வாழ்வில் செம்மையும் இன்பமும் காணும் நாட்டம் கொண்டிருந்தது. மக்கள் சிவன், திருமால் போன்ற தெய்வங்களை வணங்கினாலும் சைவம், வைணவம் எனும் சமயங்கள் தோன்றாக் காலம் அன்றைய காலம். ஆனால் அவை உருவாவதற்குத் தேவையான அடிப்படைக் கோட்பாடுகள் அன்று தோன்றியிருந்தன. தங்களுக்கு ஏற்பட்ட நோய் நீங்கவும் சொன்ன சொல் தவறுவதில்லை என்று ஆணையிடுவதற்கும் மக்கள், தெய்வங்களை வழிபட்டனர். இதனை,

> "பரவியும் தொழுதும் விரவுமலர் தூயும்
> வேறுபல உருவின் கடவுள் பேணி
> நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
> எய்யா மையலை நீயும் வருந்துதி" (குறிஞ்சி : 5-8)

என்ற தொடர்கள் விளக்குகின்றன.

கடவுள் என்ற சொல்லைக் 'கடவு, உள்' என்று பிரிக்கலாம். இச்சொல் புறநானூற்றில் பல பாடல்களில் இடம்பெறுகிறது. கடவு என்னும் சொல்லுக்குப் பொருள் 'வழி' என்பதாகும். கடவுள் என்ற சொல்லுக்கு உள்ளத்தைச் செலுத்துகின்ற ஆற்றல் அல்லது உள்ளத்தைக் கடந்தது என்று என்றும் குறிக்கின்றனர் அறிஞர். (தமிழர் மெய்யியல் - ப. 19)

> "கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி" (புறம் : 260)
> "நெல்லுகுத்துப் பரவும் கடவுளும்" (புறம் : 335)
> "கடவுட்குந் தொடேன்" (புறம் : 399)
> "கலிகெழு கடவுள்" (புறம் : 52)